மேகச்யாம: பீதவாஸா முராரி: -
ஸ்ரீவத்ஸோர: கௌஸ்துபோத்பாஸிதாங்க: ।
ஆருஹ்யைநம் தார்க்ஷ்யமாராதுபேதம் -
ப்ரோவாசைவம் ப்ரூஹி யத்தேபிலாஷம் ॥ 42

இதி ஸஞ்சோதிதோ ராஜா ப்ரணம்ய மதுசூதனம் ।
ஆபபாஷே புரஸ்யாஸ்ய தீர்தஸ்ய ச தவேச்வர: ॥ 43

மந்நாமாங்கித மாகல்பம் பூயான் நாம ஹரே: புந: ।
த்வத் ஸாலோக்யம் யதேஹ்யத்ய வரோऽயம் வரதோ யதி॥

இதி ஸம்பாஷமாணேஸ்ऽமிந் தேவ ஸம்ஸதி ராஜனி ।
விமானம் ஸூர்யஸங்காசம் தப்தஜாம்பூனத ப்ரபம் ॥ 45

திவ்யஸிம்ஹாஸநோபேதம் திவ்யரத்நவிபூஷிதம் ।
ஆரோப்ய வைஷ்ணவம் தாம ப்ராபயிஷ்யதி கேசவ: ॥ 46

ய இதம் நந்திநாதஸ்ய மாஹாத்ம்யம் வேதஸம்மிதம் ।
தர்ம்யம் யசஸ்ய மாயுஷ்யம் புண்யம் புஷ்டிவர்தநம் ॥ 47

விஷ்ணுஸாயுஜ்யதம் ந்ருணாம் ச்ருணுயாச்ச ஸமாஹித: ।
ய: படேத் பரயா பக்த்யா பதம் வைஷ்ணவமேதி ஸ: (ச-ஆ)॥48

வைகுண்டம் தாம கல்யாணி ஸம்ப்ராப்நோத்யபுனர்பவம் ।
ஸன்னிதௌ நந்திநாதஸ்ய ஸந்தௌ ப்ராந்தேஷு பூரிச: ॥49

ஸர்பிஷாபூர்ய கார்பாஸ தந்துநா தீபமானயேத் ।
ஸோऽபி முக்தோ வரான் போகான் ப்ராப்னோதி விபுலாம்
ச்ரியம்॥

ஸ்வயமாரோப்ய மேகாவீ துலஸீதளமாலயா ।
அலங்கரோதி நந்தீசம் லக்ஷ்மீவல்லபதாம் யயௌ ॥ 51

யத்யதிஷ்டதமம் ஸர்வம் நந்திநாதஸ்ய பாவநாத் ।
ஸம்பூய ஸகலான் போகான் ப்ராப்னோதி கிரிஜே ஸதா ॥ 52

இதி ஸ்ரீபவிஷ்யத்புராணே ப்ரஹ்மநாரதஸம்வாதே
சதுர்விம்சதி ஸம்ஹிதாயாம்
சதுர்த்தோऽத்யாய:

# நந்திபுரமாகாத்மியக் கதைச்சுருக்கம்

## முதல் அத்தியாயம்

ஒரு சமயம் நாரதர், பிரம்ம தேவரை வணங்கி, "திருமால் தனது விஷ்ணு லோகத்தை விட்டு பூலோகத்தில் காணப்பெறும் காவிரிக்கரைக்கு வந்துள்ளார். அவ்வாறு வரக்காரணம் என்ன ?" என்று வினவினார். அதற்குப் பிரம்மதேவர், "திவ்யமானதும் உலக வாழ்க்கை எனும் கடலிலிருந்து முக்தியளிக்க வல்லதும் ஆன லக்ஷ்மீபதியின் கதையினைக் கூறுகின்றேன். கேளுங்கள்" என்றார்.

ஒருகால் கைலாச சிகரத்தில் சிவபெருமான் ஸஞ்சரித்தவாறே பார்வதி தேவியினிடத்தில் ரகசியமாக ஒரு செய்தியைத் தெரிவிக்கின்றார். அச்செய்தி கீழ்வருமாறு-

மாவலிச் சக்ரவர்த்தியிடம் மூவடி மண்வேண்டி திருமால் உலகளந்த பெருமாளாகக் காட்சி கொடுத்தார். பிரம்மாண்டமே அஞ்சிய அவ்வேளையில் நாரணன் பாதத்துழாயான கங்காதேவி, நலந்திகழ்சடையான் எனப் போற்றப்பெறும் சிவபெருமானை வணங்கி தோத்திரம் புரிந்து, 'திருமாலின் மார்பில் திருமகள் எப்போதும் இடம் பெறக்காரணம் யாதென' வினவினார். அதற்கு சிவபெருமான், "திருமால் அவதாரம் எடுக்கின்ற போது இலக்குமியைப் பிரிந்து வருகின்றான். அவ்வாறின்றி எப்போதும் இணை பிரியாதிருக்கத் திருமகள் திருமாலைத் தோத்தரித்து மகிழ்வித்தாள்.மகிழ்ச்சியுற்ற திருமால் திருமகளின் முன்னர் தோன்றி, "உன்னுடைய எண்ணம் எதுவோ

அதனைக் கூறினால் நான் நிறைவேற்றி வைப்பேன்" என மொழிந்தார். அதற்கு இலக்குமிதேவி, "தாங்களுடைய திருமார்பில் நான் என்றும் நிலைத்திருக்க வேண்டும் என்பதே எனக்கு விருப்பமாகிய வரம்" என்று கூறினாள். திருமகளின் வரத்தைக் கேட்ட திருமால், "இதுவரை கரதலத்தில் வீற்றிருக்கும் நீ அடைதற்கரிதான எனது மார்பில் வாசம் புரிதலை உனது விருப்பமுள்ள வரமாகக் கேட்டுள்ளாய். உன் விருப்பத்தை நிறைவேற்றுவேன் என்று சொன்ன என்னுடைய ப்ரதிக்ஞையிலிருந்து சிறிதும் நான் நழுவமாட்டேன். இருப்பினும் உன் விருப்பம் ஈடேற முதலில் நீ அகத்திய முனிவர் தவம் புரியும் இடத்திற்குச் சென்று பலகாலம் தவமேற்று, பக்தியோகத்தின்பால் என் இதயகமலத்தில் இடம் பிடிப்பாயாக" என்று கூறினார். திருமகளும் திருமாலின் அறிவுரைப்படி அகத்திய முனிவரைத் தேடிச் சென்றாள். அகத்திய முனிவரும் கடலைச் சென்றடைய விரும்பிய காவிரி தம்மிடம் வந்து அவருக்குத் தெரியாமல் எங்கேயோ சென்றுவிட அந்த காவிரி நங்கையையும் தேடி திருவரங்கத்திற்கு வருகை புரிந்தார். அரங்கத்தில் அரவணைத் துயிலும் ஆதி மூர்த்தியைக் கண்டு வணங்கி அவரிடம் அகத்திய முனிவர், காவிரி தேவி என்னை விட்டு எங்கு சென்றாள் என்பதை அறிகின்றிலேன். அந்த காவிரியின் அருகில் வாஸம் செய்தாலும், யோகீச்வரரான தாங்களின் அருளாலும் என்னுடைய யோகம் நற்பயனைத் தரும்" என்று திருமாலிடம் தெரிவித்தார். அதைக்கேட்ட திருமால், "திருவரங்கத் திலிருந்து கிழக்கில் நான்கு யோசனை (4X9=36 மைல்) தொலைவிலும், கீழைக்கடலிலிருந்து மேற்கில் மூன்று யோஜனை (3X9=27 மைல்) தூரத்திலும், சம்பகாரண்ய க்ஷேத்திரத்திலிருந்து (மன்னார்குடியிலிருந்து) வடக்கில் ஒரு யோஜனையிலும் சக்ரதீர்த்தத்திற்கு (கும்பகோணம்-சக்ரபடித்துறையிலிருந்து) தெற்கில்

குரோசத் (இரண்டேகால் மைல்) தொலைவிலும், தேவர்களாலும் அறியவொண்ணா வகையில், ஸ்ரீவைகுந்தத்திற்கு ஒப்பாகவும் "ஸ்ரீநிவாஸபுரம்" என்ற திருப்பெயரோடும் என்னுடைய திவ்யதேசம் ஒன்று திகழ்கின்றது. அங்கே சென்று என்னை வழிபட்டுத் தாங்கள் விரும்பியவற்றை அடைவீராக என்று கூறி அகத்தியரை அங்கே அனுப்பிவிடுகிறார்.

காவிரியைத் தேடிச் சென்றதால் அகத்தியரும் அகத்தியர் தவம் புரியும் இடம் நாடிச் சென்றதால் திருமகளும் மேற்கூறிய எல்லைகளுக்குள்ளே திகழும் ஸ்ரீநிவாஸபுரத்தை அடைந்து, தவம் புரிந்து, விரும்பிய அனைத்தும் பெற்றும் மகிழ்ந்தனர். அவர்களுக்கு அருள் செய்த பெருமாள் இன்னமும் அங்கேயே வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார்.

*முதல் அத்தியாயம் நிறைவுற்றது*

## இரண்டாம் அத்தியாயம்

நாரதர், தந்தையரான பிரம்ம தேவரிடம், "இன்னமும் திருமால் அங்கேயே எழுந்தருளி யிருக்கின்றாரா ? அங்கிருந்து என்ன செய்கிறார் ? என்பதைத் தாங்கள் முழுமையாகக் கூறுங்கள், கேட்பதற்கு நான் ஆவலுடன் இருக்கின்றேன்" என்று கேட்டுக்கொண்டார். அதற்கு பிரம்மதேவர், "தேவர்களுக்கெல்லாம் தோன்றாத ஒரு கேள்வி எப்படித்தான் தாங்கள் மனத்திலெழுந்தது ? தாங்கள் கேட்ட செய்தி நினைத்த மாத்திரத்தில் பெரும்பயன் தரவல்லது. அப்படிப்பட்ட அந்த செய்தியினைக் கூறுகிறேன். கேளுங்கள்" என்றார். பிறகு பிரம்மதேவர், பார்வதீதேவியும் சிவபெருமானிடம், 'அகத்தியருக்கும்

திருமகளுக்கும் அருள்புரிந்த நிலையில் இன்னமும் அங்கே திருமால் எழுந்தருளியிருப்பதற்கு காரணம் யாதென வினவினாள். அதற்கு சிவபெருமான், “நாமிருவரும் முதலில் திருமால் வாஸம் புரியும் இடத்திற்குச் செல்வோம். அங்கே சென்றபிறகு நீ கேட்ட வினாவிற்குத் தக்க விடை கொடுப்பேன்” என்று கூறும்போதே தேவர்களைனைவரும் மாலி, சுமாலிகளால் மிகவும் பீடிக்கப்பட்டவர்களாய் சிவபெருமானைத் தஞ்சம் புகுந்தனர். சிவபெருமானும் அவர்களது வருகைக்கான காரணத்தைக் கேட்க, தேவர்கள், “உப்புக்கடலுக்கு தெற்கில் இலங்கை என்றொரு நகரமுள்ளது. அது யாவராலும் நுழையத் தகாத நகராமாயும் காட்சி தருகின்றது.அங்கே மாலி, சுமாலி என்பவர்கள் திருமாலைப் பூசித்து அவரிடமிருந்து சுராசுரர்களால் கொல்ல முடியாத வரத்தைப் பெற்று, எங்களைத் துன்புறுத்துகின்றனர். அந்த கொடியவர்களைக் கொன்று எங்களுக்கு இன்பத்தையளிக்க வேண்டும்” என்று வேண்டினர். அதைக் கேட்ட சிவபெருமான், “திருமாலிடம் சென்று நாம் முறையிடுவோம்” என்று தெரிவிக்க, சிவபெருமானுடன் தேவர்களும் திருமால் இருப்பிடத்திற்குச் செல்லுகின்றனர்.

அங்கே சிவபெருமானின் கட்டளையை ஏற்று நந்திதேவர் தான் ஒருவர் மட்டுமே கேசவனைக் காணச் செல்கிறார். அப்போது வாயிற்காப்பாளர் வழிமறிக்க அவர்களை மீறி உட்புகுந்து நந்திதேவர் அடுத்துள்ள கோபுர வாயிலைக் காத்து நிற்கும். ஜயவிஜயர்களின் சாபத்திற்கு உள்ளாகிறார். உடனே அவர் ஜயவிஜயர்களின் சாபத்திலிருந்து விடுபட சிவபெருமானிடம் அதற்கு சிவபெருமான் திருமாலை நோக்கித் தவம் புரியச் சொல்ல, நந்திதேவரும் தவமேற்று, தோத்திரங்களாலும் திருமாலை

மகிழ்வித்தார். நந்திதேவரின் தவத்தால் மெச்சிய திருமால், மலர்மங்கை நாயகனாய்க் காட்சி கொடுத்து, "நந்திதேவரே ! தங்களது தவத்தால் மகிழ்ச்சி யடைந்துள்ளேன். தாங்கள் ஜயவிஜயர்கள் கொடுத்த சாபத்திலிருந்து விடுபடவேண்டுமானால் பூலோகத்தில் அகத்தியரும், மகாலட்சுமியும் வணங்கிப் பேறுபெற்ற "ஸ்ரீநிவாஸபுரம்" என்றழைக்கப்படும் இடத்திற்குச் சென்று, அங்கே ஆநந்தவிமானத்தின் கீழே அமர்ந்து அருளாசி வழங்கும் என்னை வழிபடுவீர்களாக. நானும் அப்போது சுமாலி, மாலி, மால்யவான் விச்ரவரஸ்ஸின் புத்திரரான ராவணன் ஆகியோர்களை ஒடுக்கவும், குபேரனது புதல்வர்களைக் (நளகூபரன், மணிக்ரீவன்) காக்கவும், அவதாரம் எடுத்து வருவேன். அப்போது ஜயவிஜயர்களும் என்னுடன் இருக்க, தங்களுக்கு வரமளிப்பேன். தாங்களும் அவ்வாறு செய்தால் சாபவிமோசனம் அடையலாம். என்று கூறி மறைந்து விடுகிறார். இந்த கூற்றுக் கிணையாகத் திருமங்கை மன்னனின் விபவாவதார அனுபவம் ஈண்டு நினைக்கத் தக்கது. தேவர்களனைவரும் தத்தம் இருப்பிடம் செல்ல நந்திதேவர் மட்டும் கைலாசம் சென்று சிவபெருமனிடம், "நான் பூலோகமேகித் திருமாலைக் குறித்துத் தவம் செய்ய நினைக்கிறேன்" என்று தம் விழைவைத் தெரிவித்து, பூவுலகையடைந்து, வஸந்த க்ரீஷ்ம-வர்ஷ-சரத்-ஹேமந்த-சிசிர ருதுக்களின் முறையே ஐந்து அக்னிகளின் நடுவிலும், பெரிய தடாகத்திலும், குகையிலும், மலைமீதும், கானகத்திலும், திருமாலை நினைத்துப் பலகாலம் தவமிருந்து அவரை மகிழ்வித்தார். பின்னர் நெடுநாள் கழித்து ஒரு சமயம் திருமால், சார்ங்கம், கதை, சங்கம், சக்ரம், கத்தி, பீதாம்பரம், மலர்மாலை போன்றவற்றை தரித்தவராய், கருடாரூடராகக் காட்சிக் கொடுத்தார். அப்போது நந்திதேவரைக் குறித்து ஜயவிஜயர்களை முன்னிட்டுக் கொண்டு திருமகள் கேள்வனான ஸ்ரீமந்நாராயணன் தங்களால்

வணங்கப்பெற்று மகிழ்ந்துள்ளேன். தாங்களுக்கு வரமருள வேண்டியே தற்போதிங்கே வந்துள்ளேன், விரும்பிய வரத்தைக் கேட்டுப் பெறுவீர்களாக" என்று கூறினார். அதற்கு நந்திதேவர், ஜகந்நாத ! எனக்கு வரமருள இங்கு வந்துள்ளீர்கள். ஆதலால் என்னுடைய தவமும் பயன் உடைத்தானது ! நான் இந்த தலத்தில் உன்னைத் தவம் செய்ததால் என் சாபமும் நீங்கப் பெற்று, ஸ்ரீநிவாஸபுரம் என்று அழைக்கப்பெறும். இந்த திருத்தலம் "நந்திபுரம்" என்றும், இங்குள்ள புஷ்கரிணீ "நந்திபுஷ்கரிணீ" என்றும் இங்கு அருள்பாலித்துவரும் தேவரீராகிய ஜகந்நாதன் "நந்திநாதன்" என்றும் எனது பெயராலேயே அழைக்கப்பட வேண்டும், இதுவே யான் வேண்டும் வரம் என்றார். அதனைச் செவிமடுத்த திருமால், திரிகரண சுத்தியோடு தாங்கள் தவமியற்றி தேவர்களாலும் அடைய ஒண்ணாத வரத்தைக் கேட்டுள்ளீர். இருப்பினும் நீவிர் விரும்பியபடியே ஆகட்டும்" என்று மறுமொழியுரைத்து இன்னமும் அந்த திவ்ய தேசத்திலேயே அருள்பாலித்து வருகிறார்.

*இரண்டாம் அத்தியாயம் நிறைவுற்றது*

## மூன்றாம் அத்தியாயம்

நாரதர், தந்தையே ஸ்வயம்வ்யக்தம், ஆர்ஷம், தைவம், மாநவம் எனப்படும் விஷ்ணு ஸ்தலங்களில் பெரும்பாலும் திருமால் கிழக்குத் திசையை நோக்கியே அருள்பாலித்து வருகிறார். அதற்கு மாறாக க்ஷேத்திரத்தில் மேற்றிசை நோக்கி எழுந்தருளி யுள்ளமைக்குரிய காரணத்தை விரிவாக எனக்குரைக்க வேண்டும் என்று வேண்டினார். அதைக்கேட்ட பிரம்ம தேவரும் தான் சிவபெருமானை அணுகிக் கேட்ட செய்திகளை அப்படியே விளக்குகிறார்.

சிவபெருமான் தியானத்திலிருக்கும்போது நாரதர் கேட்ட வினாக்களை சிவபெருமானிடம் கேட்க, சிவபெருமான்,

ஒரு சமயம் இந்திரனுக்கும், விருத்ராசுரனுக்கும் தொடர்ந்து ஏழு நாட்கள் போர் நடந்தது. அதில் உணவையும் நினையாது இருவரும் போர் செய்தனர். போரில் விருத்ராசுரன் தோற்றான். அப்போது சிபிச்சக்கரவர்த்தி விரைவாய்த் தேரில் வந்து இந்திரனே ! 'பயம் வேண்டாம்' என்று கூறியவாறு விருத்ராசுரன் அருகில் சென்று, விருத்ராசுரனை இந்திரனிடமிருந்து காப்பாற்றினான். விருத்திராசுரனோவெனில் மறுபடியும் இந்திரனுடன் போரிட்டு மூர்ச்சையடைந்து கீழே பூலோகப் பூமியில் விழுந்தான்.

பூமியை வந்தடைந்த விருத்ராசுரனைப் பார்த்து சிபிச்சக்ரவர்த்தி உனக்கு சக்தியிருக்குமானால் என்னுடன் போர் செய்யுங்கள். இல்லையேல் இந்திரனுக்கு ஸ்வர்க்கலோகத்தைக் கொடுத்து விடுங்கள் என்று அறிவுறுத்தினான். விருத்திராசுரனும் சிபிச்சக்ரவர்த்தி கூறியபடியே செய்து தனதிருப்பிடம் திரும்பினான்.

இந்திரனோவெனில் விருத்திராசுரனை ஆபிசாரஹோமம் செய்து அழிக்க முற்பட, அபஸ்வரத்தோடு வேள்வியில் மந்திரோச்சாரணம் செய்ததால், தானே அழியக் காரணமானான். அவ்வமயம் முனிவரும், தவம்புரிவோரும் இந்திரனுக்கு "ஜயம் உண்டாகட்டும்" என்று ஆசி வழங்க இந்திரன் மீண்டும் உயிர்பெற்று எழுந்தமர்ந்தான். அதைக்கண்டு அனைவரும் மகிழ்ச்சியுற்றனர். அக்னி பகவானும் இந்திரனை முன்னிட்டு மகிழ்ச்சியோடு மற்றைய தேவர்களுடன்

சிபிசக்ரவர்த்தியை அடைந்து, அரசே ! ‘ஆபத்தில் உதவி செய்பவர்களுக்கு நிகர் மூவுலகில் யாரும் இலர். ஆதலால் தாங்களுக்கு உதவ காத்திருக்கிறோம். வரமருளுகின்றோம். இந்திரலோகம் ஆளும் பதவியோ அல்லது உங்களுக்கு பிடித்தமானவற்றை தாங்கள் விரும்பினாலும் அதை அளிக்கின்றோம்’ என்று கூறினர்.

.அதைக்கேட்ட, சிபிச்சக்ரவர்த்தி, தனக்கு கைவல்யம் (மோக்ஷம்) அருள வேண்டும் என்று வேண்டினார்.

அதற்கு அக்னி பகவான், அரசே கைவல்யம் அருள்வது அடியோங்களால் இயலாது. அதற்குரிய காரணத்தைக் கூறுகின்றேன் கேளுங்கள்.

கீழைக் கடலிலிருந்து மூன்று யோஜனை தொலைவில் ஆதவனின் ஒளிக்கற்றைகளுக்கு (3 X 9 = 27 மைல்) தொலைவில் ஆதவனின் ஒளிக்கற்றைகளுக்கு G è ó £ è ^ F è › õ ¶ ‹ ஸ்ரீநிவாஸபுரம் என்று அழைக்கப் பெறுவதுமான திருத்தலம் ஒன்று திகழ்கிறது. அங்கு ஆநந்தவிமானமும் அதன் மேற்கில் ஒரு புண்ணிய தீர்த்தமும் உள்ளன. அதன் கரையில் நிறையக் கிளைகளோடு பெரியதோர் அச்வத்தமரம் (அரசமரம் (அ) அத்தி மரம்) காணப்படும். அந்த மரத்தின் அடியில் தேவர்களும் மனுஷ்யர்களும் வாஸம் புரிகின்றனர். அந்த மரத்தினுடைய நிழலில் அனைத்து உயிரினங்களும் உயிர்வாழ்கின்றன. தாங்களும் அங்கே சென்று புண்ணிய தீர்த்தத்தில் நீராடி ஜபம், வேள்வி ஆகியவற்றால் நந்திநாதனைத் தொழுது அந்த இடத்தை ஓர் ஆலயமாகச் செய்து அங்குறையும் நாதரை மகிழ்விப்பாயாக. அவ்வெம்பெருமானும் தாங்களுக்குக் கைவல்யத்தை அளிப்பார்” என்று தெரிவித்தார். அரசனும் அக்னி

பகவான் மொழிந்ததைக் கொண்டு தேவர்களிடம் விடைபெற்றுத் தென்தேசயாத்திரை தொடங்கி, மேற்கூறிய அடையாளங்கள் பொருந்திய நந்திநாதபுரத்தை அடைந்து, அங்கருள்பாலித்துவரும் எம்பெருமானைச் செல்வத்தாலும் மனோவாக் காயாதிகளாலும் நூறாண்டு காலம் பணிவிடை புரிந்தான்

சிபிச்சக்ரவர்த்தி மற்றும் நந்திதேவர் ஆகியோரால் அன்பினால் ஈர்க்கப்பெற்ற எம்பெருமான் அவர்களுக்குத் தம்மிடம் மேலும் அன்பை வளர்க்க எண்ணி மேற்றிசை நோக்கியவரானார். அது முதல் நாதன் கோவிலின் சந்நிதி மேற்றிசை நோக்கியதாய் விளங்குகிறது.

மேலும் நந்தி புஷ்கரிணியில் நீராடி நந்திநாதனைத் துதித்து, அவரை வலம் வந்தால் அனைத்துப் பாதகங்களிலிருந்து விடுபடலாம் என்று தெரிவித்ததாகப் பிரம்மதேவர் நாரதருக்கு கூறி இவ்வத்யாயத்தை நிறைவு செய்கிறார்.

*மூன்றாம் அத்தியாயம் நிறைவுற்றது*

## நான்காம் அத்தியாயம்

நாரதர் திருமகள், அகத்தியர், நந்திதேவர் ஆகியோர்களுக்கு வரமளித்த பின்பும் ஏன் அங்கேயே இருக்கின்றார் என்று பிரம்ம தேவரிடம் வினவினார். அதற்கு பிரம்மதேவர்,

'பூலோகத்தில் நூற்றெட்டு வைணவத் திருத்தலங்கள் உள்ளன. அவற்றுள் இந்த நந்திநாதபுரமே சிறந்தது என்பதைத் தெரிவிப்பதற்காகவே இன்னமும் அங்கேயே எழுந்தருளியுள்ளார்" என்று கூறினார்.

மேலும் அங்குள்ள புண்ய தீர்த்தத்தின் கரையில் வாஸம் புரியும் அகஸ்தியர் நந்திதேவர், சிவபெருமான் ஆகியோர்களுள் சிவபெருமான் பார்வதிக்கு இவ்வத்தியாயப் பெருமைதனை ரகசியமாக உபதேசிக்கின்றார்.

ஒருசமயம் சிபிச்சக்ரவர்த்தி என்னும் அரசன் அங்குள்ள அநந்தஸரஸ்ஸில் (அனந்தமெனும் பொய்கையில்) காலை மாலை வேளைகளில் நீராடி ஜகந்நாதனைத் தொழுது பயனடைந்தவனாய் அறநெறியிலிருந்து சிறிதும் வழுவாது ஆட்சி புரிந்து வருகிறான். அந்த அரசனைப் பரீக்ஷிப்பதற்காக யமனும் இந்திரனும் முறையே கழுகு மற்றும் புறா வடிவங்களைத் தாங்கி நந்திநாதபுரத்திற்கு வந்தனர். அவர்களுக்குள் கழுகு வடிவமெடுத்த எமனுக்குப் பசியும் தாகமும் ஏற்பட்டு, புறா வடிவெடுத்த இந்திரனைக் கொல்ல விரைவாய்த் தொடர்ந்தோடி வந்தது. அதைக் கண்டஞ்சிய புறா தன்னைக் காப்பாற்றக் கோரி சிபிச்சக்ரவர்த்தியினிடம் சரணடைந்தது. சரணம் புகுந்த புறாவைத் தேற்றிய கருணாமூர்த்தியான மன்னன் பயப்படாதே ! உன்னை நான் காப்பாற்றுகிறேன் என்று கூறினார். பின்னர் சிறிது காலத்தில் கழுகும் விரைவாய் அம் மன்னவனிடம் அடைக்கலம் புகுந்து அரசே ! நான் பசியோடு வந்துள்ளேன். எனக்குப் புறாவை உணவாகக் கொடுங்கள் என்று வேண்டியது. புறா தனக்கு உயிர்பிச்சையை வேண்ட, புறாவையே உணவாக வேண்டியது கழுகு. கழுகுக்கும் புறாவிற்கும் உதவி புரிய எண்ணிய அரசன் செய்வதறியாது திகைத்தான். அப்போது கழுகு, புறாவையும் காத்து, என் பசியையும் தீர்க்க நினைத்தீராகில் புறாவை ஒரு திராசில் வைத்து அதற்கு நிகரான எடையில் உமது மாமிசத்தை

எனக்களிப்பீராக என்று யோசனை கூறியது. கழுகின் யோசனை கேட்டு மகிழ்ந்த அரசன், நன்று ! நன்று! என்று கூறியவனாய் இப்படிச் செய்வதால் இரு பறவைகளுமே காப்பாற்றப்டும் என நினைத்து நந்திநாதரைத் தியானித்து, திராசு ஒன்றை எடுத்து ஒரு தட்டில்புறாவையும் மற்றொரு தட்டில் கத்தியால் அரிந்தெடுத்த தனது தொடை மாமிசத்தையும் வைத்தான். அவ்வாறு மூன்று முறைகள் அரிந்து வைத்தும் புறாவினை வைக்கப் பெற்றுள்ள தட்டு மேல் எழும்பவே இல்லை. ஆதலால் வருந்திய சிபிச்சக்ரவர்த்தி நந்திநாதனைத் தோத்திரம் செய்து தன்னை முற்றுமாய் அர்ப்பணிக்கத் துலாரோகணம் செய்தான். அரசனின் அற்புதச் செய்கை கண்டு துந்துபி போன்ற வாத்யங்கள் முழங்க தேவலோகத்திலிருந்து தேவர்கள் பூமாரி பொழிந்தனர். பின்னர் புறாவும், கழுகும் இந்திரனும் யமனுமாகச் சுய உருவுடன் தோன்றி உம்மை பரீக்ஷிக்கவே யாம் வந்தோம் உமக்கு விருப்பமான வரத்தைக் கேட்டுப் பெறுவீராக என்று கூறினர்.

அதற்குச் சிபிச்சக்ரவர்த்தி பூமி, சுவர்க்கம், மண்ணரசு ஆகியவற்றில் ஒன்றையும் யான் வேண்டேன். தங்களிடம் வேண்டப்படுவது யாதெனில் நன்னடத்தை மங்களம் அறவழியில் செல்கை ஆகியவையேயாகும்" என்று கூறினார்.

பிறகு நந்திநாதனான ஜகந்நாதனைத் தொழ, அவரும் காட்சி நல்கி, வரம் கேட்கச் சொல்ல, சிபிச்சக்ரவர்த்தியும் என் பெயரால் இந்த க்ஷேத்திரமும் தீர்த்தமும் அழைக்கப்பெற வேண்டும் எனக்

கேட்டுக்கொண்டு, எனக்கு வீடுபேறும் அளிக்க வேண்டும் என்று ஸாலோக்ய மோக்ஷத்தினைப் பெற்று உய்ந்து போனார்.

இவ்வளவு பெருமை வாய்ந்த நந்திநாதனுடைய மாகாத்மியம் புண்ணியம் வலிமை ஆயுள் விஷ்ணு ஸாயுஜ்யம் ஆகியவற்றைக் கொடுக்கவல்லது. இதனை பக்தியுடன் படிப்பவர் வைஷ்ணவ பதத்தை (விஷ்ணுலோகத்தை) அடைந்து மறுபிறப்பற்ற சாச்வதமான மோக்ஷத்தையும் (நிலையான வீடுபேற்றையும்) பெறுவர்.

மேலும் நந்திநாதனுடைய சந்நிதானத்தில் காணப்பெறும் பறைகளில் நெய் ஊற்றி, பஞ்சினாலான திரியினை இட்டு விளக்கேற்றுபவர் விரும்பிய பேறுகளை அடைவதோடு நிறையச் செல்வத்தையும் பெறுவர். நந்திநாதருக்குத் திருத்துழாய் மாலையினை அணிவிப்பவர் ஸ்ரீமான்(செல்வந்தர்) ஆகி நினைத்ததெல்லாம் கிட்டப்பெற்று அனைத்து போகங்களையும் அடையப் பெறுவர்.

சிவபெருமானின் உபதேசம் நிறைவுறுகிறது.

இத்துடன் நந்திபுர மாகாத்மியம் கூறும் நான்காம் அத்தியாயம் முற்றுபெறுவதோடு பவிஷ்யத் புராணத்தில் சதுர்விம்சதி ஸம்ஹிதையில் பிரம்மநாரத ஸம்வாதமாக (பிரம்மதேவரும் நாரதரும் உரையாடல் வழி) இயற்றப்பெற்ற நந்திபுர மாகாத்மியமும் நிறைவினைத் தழுவுகின்றது.

சுபம்

## अनुबन्धः*

श्रीः

# शार्ङ्गपाणिस्तोत्रम्**

श्रीरामप्रसन्न ।

सकलभुवनसारं गात्रकान्त्यामसारं-
मणिवरमभिभूतं सञ्चरन्तं प्रभूतम् ।
खगपरिवृढपत्रं चन्द्रकान्तातपत्रं
स्मरनतमुचुकुन्दं शार्ङ्गपाणिं मुकुन्दम् ॥ 1

स्वर्णाब्जिनि दर्शनमात्रपूताः-
श्रीकुम्भघोणे कृतनित्यवासाः ।
श्रीशार्ङ्गपाणौ दृढभक्तियुक्ताः
सन्तः कियन्तो निवसन्ति लोके ॥ 2

निर्निद्रनीरेरुहपत्रनेत्रं-
शरन्निशानाथमुखारविन्दम् ।
शनैः शनैः त्यज्य भवाभिलाषं
श्रीशार्ङ्गिणं चिन्त्यं तवाल्पचेतः ॥ 3

कदा नीरदापायराकेन्दुपद्म-
प्रतिछन्दमास्यं तवालोकयिष्ये ।
कदा क्रूरभाषं मुखं दुष्प्रभूणां
धनाशावबद्धो न पश्यामि शार्ङ्गिन् ॥ 4

---

* See P. No. 2

नमः शार्ङ्गहस्ताय हस्तीन्द्रपात्रे-
नमश्चन्द्र वक्त्राय पीताम्बराय ।
नमः सिंहराजाय सिंहारिभेत्रे
नमः शुद्धसत्वात्मने मुक्तिदाय ॥ 5

नमो नीलजीमूतनीकाशतुभ्यं
नमो विक्रमाक्रान्तलोकत्रयाय ।
अपारामितक्लेशसंसारसिन्धो-
र्निजं सेवकं शार्ङ्गभृत्तारयाशु ॥ 6

नमामि शार्ङ्गिणं हरिं स्मरामि चक्रिणं परं
वदामि नामकेशिहर्तुरिन्दिरापतेरहम् ।
न दैवतान्तरं स्मरे नमामि नान्यमेकदाप्य-
हं तवैव किङ्करोस्मि नान्य नाम वा वदे ॥ 7

गजावनजनार्दन प्रणतपावनश्रीवर-
घुसद्म हृदयाम्बुजप्रकटनार्कदैत्यान्तक ।
विरिञ्चिवचनावली विनुतपादविष्णो हरे
रथाङ्गदरशार्ङ्गभृत् भयहरेति जिह्वे वद ॥ 8

अतिनिकटे वसतो मे-
परिचरणार्थं तवप्रभो शार्ङ्गिन् ।
चामरमयूरपत्र-
व्यजनादिषु देयमेकं मे ॥ 9

कौमुदीविशदस्मितं मधुभाषणं सुरपालनं-
चन्द्रपङ्कजबन्धुलोचनमिन्दिरारमणं हरिम् ।
चण्डबाहुपराक्रमासुरसङ्घमर्दनमद्भुतं
शार्ङ्गचापमुपास्महे शुभकुम्भघोणकृतालयम् ॥ 10

अभूःकळत्रैरपतङ्गवाहै-
रमेघनीलैररथाङ्गहस्तैः ।
अपङ्कजाक्षैरपयोधिवासै-
रशार्ङ्गचापैरलमन्यदेवैः ॥ 11

मरुच्चन्द्रसूर्यौ वियच्चाग्निरीशो-
जलं भूरिमा मूर्तयो यस्य चाष्टौ ।
तृणं वापि न स्पन्दते यस्य शक्तिं
विना वन्द्य एकः सनः शार्ङ्गपाणिः ॥ 12

भवति मतिरुदारा शार्ङ्गपाणौ कदा नः-
परिहृतकलिदोषे शेषशय्या शयाने ।
विरमति च कदा वा दुःखदारिद्र्यमूर्च्छा
जटिलभव नितान्तासक्तिदुर्व्यापृतेश्च ॥ 13

नवजलधरनीलं निर्मितानङ्गखेलं-
रहसि जलधिकन्या बाहुसंशोभिकण्ठम् ।
किमपि मधुरवाचां बृन्दमुच्चारयन्तं
मनसि सततमीडे शार्ङ्गपाणिं मुकुन्दम् ॥ 14

वज्राङ्कुशादि शुभरेखमुमाधवेन
धात्रार्पितं शिरसि भक्तिभरेण दिव्यम् ।
नानाविधैः सुरतरुप्रभवैः प्रसूनैः
संशोभि शार्ङ्गधरपादसरोजमीडे ॥ 15

लसन्मन्दहासं श्वसद्भोगिराजे-
शयानं दयानन्दपूर्णान्तरङ्गम् ।
सहस्रारशङ्खासि कौमोदकीभिः
सदा सेवितं शार्ङ्गपार्णि नमामि ॥ 16

वियद्रूपिणं विश्रुतामेय कीर्ति-
विरूपाक्षविध्यन्तरं भोजसूर्यम् ।
वियद्गङ्गया क्षाळिताङ्घ्रिं प्रसन्नं
श्रेये शार्ङ्गपार्णि शिवं सज्जनानाम् ॥ 17

नवमणिमयमुद्रामण्डितस्वङ्गुलीकं
करकमलमुदारं मस्तके मे निधेहि ।
दशशतरविराकाचन्द्रसाहस्रचश्चत्
तरविपुलविमानारूढ हे शर्ङ्गधन्वन् ॥ 18

लसन्नासिका ते सुचाम्पेयकोश-
प्रभाशारदाम्भोजपत्रायताक्षे ।
भ्रुवौ कामबाणासनाहं कृतिघ्ने
वपुस्ते जगन्मोहनं शार्ङ्गपाणे ॥ 19

त्वयि सति करुणार्द्रे शार्ङ्गधन्वाभिधाने
करिवरदजगत्यां कामधेनौ त्वदन्यम् ।
किमिति नरमुवासे शोकगर्वाभिभूतं
कलय हृदयमेतत् त्वत्पदाम्भोजलग्नम् ॥ 20

कदा शार्ङ्गचापप्रमुक्तः पृषत्कैः-
विदार्यारिसङ्घान् मदीयान् दयाब्धे ।
नृसिह्मस्य वेषं वहन् दैत्यपुत्रं
यथा पालयस्त्वं तथा पाहि शार्ङ्गिन् ॥ 21

धवलनलिन दाम्ना शोभमानं विरिञ्चि
प्रमुखविबुधबृन्दैर्वर्णितानन्तलीलम् ।
निखिलनिगमगीतं निर्निमेषाधिराजं
निरतिशयसुखाब्धिं शार्ङ्गपाणिं भजामः ॥ 22

निजवपुषि दधानः सर्वलोकान् इमांस्त्वम्
किमु न वहसि विष्णो मां तृणात्फल्गुभूतम् ।
ननु विदितममोघं नाम तेऽनन्तविश्वं
भर इति भरणं मे किं तवातीव भारः ॥ 23

चन्द्रमोलिसरोजवन्दितं विबुधेश्वरं
क्षीरवारिधिमध्यमन्दिरसौधभागविलासिनम् ।
भोगिराजशयं वरं विमलाशयावनदीक्षितं
शार्ङ्पाणिमहं भजे परतत्वरूपमघान्तकम् ॥ 24

कुण्डलद्वयमण्डितांसयुगं युगाभचतुर्भुजी-
प्रस्फुरद्दरचक्रशार्ङ्गसरोजमम्बुजलोचनम् ।
चामरैरुपवीजितं चपलायुतप्रभवाससं
शार्ङ्गिणं भवहारिणं फणिशायिनं प्रणमामितम् ॥ 25

नखाग्रघाताभिदळत्कठोर
हिरण्यगर्भाण्डकभित्तिजन्मा ।
गङ्गाप्रवाहः किल यस्य साक्षात्
शिवेन शीर्षे विधृतः स्मरेतम् ॥ 26

भूमौ देवगणा वसन्ति शतशो भक्तावली वत्सला-
ब्रह्माद्या अतिशीघ्रमेव फलदाः पादानताखण्डलाः ।
हित्वा तान् कृतपूर्वदेवकदने निद्रालसे निर्ममे
देवे शार्ङ्गधरे कलिप्रियसखे चेतः स्थिरं मेऽद्भुतम् ॥ 27

विश्वम्भरे जाग्रति चक्रपाणौ
विहाय तत्सेवनमद्य मोहात् ।
खिन्नं सदा स्वोदरपुरणेऽपि
पुमांसमन्यं खलु हा भजामः ॥ 28

चातक इव जीमूतं-
चकार पक्षीव चन्द्रमसम् ।
कादम्बिनीमिव शिखी-
सदैव शार्ङ्गिन् ! स्मरामि तव रूपम् ॥ 29

जलधितनया वामोत्सङ्गे शयानमनामयं
शमितदनुजं शान्ताकारं शरीरभृतां प्रभुम् ।
शरणमधुना यामि श्रेयस्करं नमतां सदा
शशिरविदृशं श्रीमच्छार्ङ्गायुधं विबुधेश्वरम् ॥ 30

चतुर्भुजं चन्दनचर्विताङ्गं-
चतुर्मुखाद्यैरभिवन्द्यपादम् ।
चामीकरादिन्द्रधनुःप्रियं तं
चक्रायुधं शार्ङ्गधरं प्रपद्ये ॥ 31

प्रफुल्लमल्लीवकुलाम्बुजात-
चाम्पेयमालोत्करशोभिकण्ठम् ।
कण्ठीरवास्यं दळितारिवर्गं
प्रभुं भजामो हृदि शार्ङ्गपाणिम् ॥ 32

शरच्चन्द्रकामञ्जुलं मन्दहासं-
कदा शार्ङ्गपाणेर्वयं लोकयामः ।
रमाराधितं पादपङ्केरुहं तत्
कदा संस्पृशामो मुदा मस्तकेन ॥ 33

दरिद्रापदं दारयाद्यैवदेव-
स्वकीयान् सदा रक्ष ऋक्षेश वक्त्र ।
स्वपूरैर्गृहं पूरयाद्यास्मदीयं
स्वतन्त्रोऽसि यद्रोचते तत्कुरुष्व ॥ 34

त्वत्कीर्तनं तव कथाश्रवणं जनानां-
संसारहारिनमतामपवर्गकारि ।
ब्रह्मादि वन्द्यपदपङ्कजदिव्यमूर्ते-
मां पाहि शार्ङ्गधर सर्वसुराधिराज ॥ 35

कस्तुरिका तिलकशोभिमुखोन्दुबिम्ब-
मीषत्स्मिताञ्चितममोघकृपार्द्रवीक्षम् ।
द्रक्ष्ये कदा मधुरभाषिपवित्रकीर्तेः
श्रीशार्ङ्गचापधर वेदशिरः सुवेद्य ॥ 36

राकाशरत्छशधरातुलगर्वपूर-
सङ्कर्षणं करुणया कलिताधिवासम् ।
सन्दर्शयास्यमधुना नव पद्मकान्ति-
निक्षेपहारि मम सुन्दरशार्ङ्गपाणे ॥ 37

वन्दामहे तवपदं सुरबृन्दमौलि-
माणिरक्यदीप्तिकलितं हृदि शार्ङ्गपाणे ।
मोहान्धकार तरणे करुणाम्बुराशे
हे ! वारिजाक्ष ! शशिबिम्ब ! समास्यबिम्ब ! ॥ 38

शम्भुप्रजेश्वरशतक्रतुभिः सदैव
संस्तूयमानकृतमन्दिरकुम्भघोणे ।
सर्पेन्द्रतार्क्ष्यशयनार्ककिरीटभासा-
धिक्कारितार्कशरणं भव शार्ङ्गपाणे ॥ 39

त्वं मातासि पिता त्वमेव च सुहृद्बन्धुस्त्वदन्यं हरे-
मन्ये नैव सुरं सुरेन्द्रमपि वा ब्रह्माणमीशं गुहम् ।
वैकुण्ठे तव सन्निधौ निवसतिस्त्वन्मूर्त्यवेक्षा सदा
भूयान्मे न परं वृणे वरमहं श्रीशार्ङ्गपाणिप्रभो ॥ 40

कुण्डलद्वय मण्डितांसयुगं युगाभचतुर्भुजी
प्रस्फुरद्दरचक्रशार्ङ्गसरोजमम्बुजलोचनम् ।
चामरैरुपवीजितं चपलायुतप्रभवाससं
शार्ङ्गिणं भवहारिणं फणिशायिनं प्रणमामि तम् ॥ 41

निगमशिरसावेद्यं हृद्यं जितारुणपल्लवं
जनिमृति जरार्तिघ्नं निघ्नं सदा स्मरतां हृदि ।
चरणयुगळं त्वत्कं स्वामिन् ! प्रदर्शय ! नरस्सदा-
निरवधिकृपाकूपारोऽसि प्रभोवर! शार्ङ्गभृत् ॥ 42

त्वत्सेवादर्पभृतं-
    ब्रह्मेशादीन् सुरानगणयन्तम् ।
अहमात्मानं विष्णो-
    कदा विलोके कृतार्थमिव शार्ङ्गिन् ॥ 43

कमलनयनं कालोदञ्चत्सितेतरपङ्कज-
द्युतिशरदुमाकान्तोत्तंस प्रभाधवळस्मितम् ।
त्रिजगदुदरव्याप्तं तेजो विरिञ्चिभवादिभिः
हृदि मम सदाभूयाच्छार्ङ्गदरं च दधन्मुदे ॥ 44

प्रसीद मे दयानिधे समुद्धरार्तिवारिधेः
प्रभो ! पयोधिजासखे दरिद्रतां निरस्य मे ।
तवैकदेशविष्ठितं जगच्चराचरात्मकं
तदेकदेशरूपिणो न मे वनं तवाधिकम् ॥ 45

शातकुम्भलसदाभरणाढ्यां-
श्यामळां सुचिरामसमानाम् ।
शार्ङ्गचापधरतावकमूर्तिं-
शान्तचित्त इह नित्यमुपासे ॥ 46

निर्मलं नियमितासुरसङ्घं
निर्जरौघवरसम्मदहेतुम् ।
नन्दकाख्यकरवालमुदारं
नौमि शार्ङ्गधनुषो भयनुत्यै ॥ 47

भर्जितासुरकळेबर बृन्दां-
शार्ङ्गिणः करतले विलसन्तीम् ।
कालिकाग्निचयभीषणकान्तिं
चिन्तये वरगदां रिपुहत्यै ॥ 48

नादमूर्च्छित सरोजभवाण्डं-
निर्मलेन्दु सदृशं रविभीमम् ।
कान्दिशीकदितिसम्भवसैन्यं
शङ्खराजमरिभृत्तव नौमि ॥ 49

काशिकानगरतत्पतिकृत्या-
दाहकारणममोघममेयम् ।
सर्वदेवमयसर्वशरीरं-
चक्रमीश तव नौमि कराळम् ॥ 50

सर्वदेवादि देवेश शार्ङ्गपाणे कृपाम्बुधे ।
स्तुतिव्याजान्ममाघस्त्वं सहस्व सकलं प्रभो ॥ 51

## பிற்சேர்க்கை*

ஸ்ரீ:

### சார்ங்கபாணி ஸ்தோத்ரம்**

ஸ்ரீராமப்ரஸன்ன ।

ஸகலபுவனஸாரம் காத்ரகாந்த்யாமஸாரம்
மணிவரமபிபூதம் ஸஞ்சரந்தம் ப்ரபூதம் ।
ககபரிவ்ருடபத்ரம் சந்த்ரகாந்தாதபத்ரம்
ஸ்மரநத முசுகுந்தம் சார்ங்கபாணிம் முகுந்தம் ॥ 1

ஸ்வர்ணாப்ஜனீ தர்சநமாத்ரபூதா:
ஸ்ரீகும்பகோணே க்ருதநித்யவாஸா: ।
ஸ்ரீசார்ங்கபாணௌ த்ருடபக்தியுக்தா:
ஸந்த: கியந்தோ நிவஸந்தி லோகே ॥ 2

நிர்நித்ரநீரேருஹபத்ரநேத்ரம்
சரந்நிசாநாத முகாரவிந்தம் ।
சனை:சனை: த்யஜ்ய பவாபிலாஷம்
ஸ்ரீசார்ங்கிணம் சிந்த்யம் தவால்பசேத: ॥ 3

கதா நீரதாபாயராகேந்துபத்ம-
ப்ரதி சந்தமாஸ்யம் தவாலோகயிஷ்யே ।
கதா க்ரூரபாஷம் முகம் துஷ்ப்ரபூணாம்
தனாசாவபத்தோ ந பச்யாமி சார்ங்கின் ॥ 4

நம: சார்ங்கஹஸ்தாய ஹஸ்தீந்த்ரபாத்ரே
நமச்சந்த்ரவக்த்ராய பீதாம்பராய ।
நம: சிம்ஹராஜாய சிம்ஹாரிபேத்ரே
நம: சுத்தஸத்வாத்மநே முக்திதாய ॥ 5

---

* 26ம் பக்கம் பார்க்க

** B. 8723/D.No. 21854. T.M.S.S.M. Library, Thanjavur.

நமோ நீலஜீமூத நீகாசதுப்யம்
நமோ விக்ரமாக்ராந்தலோகத்ரயாய ।
அபாராமிதக்லேச ஸம்ஸாரஸிந்தோர்-
நிஜம் ஸேவகம் சார்ங்கப்ருத்தாரயாசு ॥ 6

நமாமி சார்ங்கிணம் ஹரிம் ஸ்மராமி சக்ரிணம் பரம்
வதாமி நாம கேசிஹர்துரிந்திராபதேரஹம் ।
ந தைவதாந்தரம் ஸ்மரே நமாமி நாந்யமேகதாப்ய-
ஹம் தவைவ கிங்கரோஸ்மி நாந்ய நாம வா வதே ॥7

கஜாவநஜநார்தன ப்ரணதபாவநபூஜீவர-
த்யுஸத்ம ஹ்ருதயாம்புஜப்ரகடநார்க்க தைத்யாந்தக ।
விரிஞ்சிவசநாவலீ விநுதபாதவிஷ்ணோ ஹரே
ரதாங்கதரசார்ங்கப்ருத் பய ஹரேதிஜி ஹ்வே வத ॥ 8

அதிநிகடே வஸதோ மே-
பரிசரணார்த்தம் தவ ப்ரபோ சார்ங்கிந் ।
சாமரமயூரபத்ர-
வ்யஜநாதிஷு தேயமேகம் மே ॥ 9

கௌமுதீ விசதஸ்மிதம் மதுபாஷணம் ஸுரபாலநம்
சந்த்ரபங்கஜபந்துலோசநமிந்திராரமணம் ஹரிம் ।
சண்டபாஹுபராக்ரமாஸுரஸங்கமர்தனமத்புதம்
சார்ங்கசாபமுபாஸ்மஹே சுபகும்பகோணக்ருதாலயம் ॥

அபூ:களத்ரைரபதங்கவாஹை-
ரமேகநீலைரரதாங்கஹஸ்தை: ।
அபங்கஜாக்ஷைரபயோதிவாஸை-
ரசார்ங்கசாபைரலம ன்யதேவை: ॥ 11

மருச்சந்த்ரஸூர்யௌ வியச்சாக்னிரீசோ-
ஜலம் பூரிமா மூர்த்தயோ யஸ்ய சாஷ்டௌ
த்ருணம் வாபி ந ஸ்பந்ததே யஸ்ய சக்திம்
விநா வந்த்ய ஏக: ஸந: சார்ங்கபாணி: ॥ 12

பவதி மதிருதாரா சார்ங்கபாணௌ கதா ந:
பரிஹ்ருதகலிதோஷே சேஷசய்யா சயாநே ।
விரமதி ச கதா வா துக்கதாரித்ர்யமூர்ச்சா
ஜடிலபவ நிதாந்தாஸக்திதுர்வ்யாப்ருதேச்ச ॥ 13

நவஜலதரநீலம் நிர்மிதாநங்ககேலம்-
ரஹஸி ஜலதிகந்யா பாஹுஸம்சோபிகண்டம் ।
கிமபி மதுரவாசாம் ப்ருந்தமுச்சாரயந்தம்
மனஸி ஸததமீடே சார்ங்கபாணிம் முகுந்தம் ॥ 14

வஜ்ராங்குசாதி சுபரேகமுமாதவேந-
தாத்ரார்ப்பிதம் சிரஸி பக்திபரேண திவ்யம் ।
நாநாவிதை: ஸுரதருப்ரபவை: ப்ரஸூநை:
ஸம்சோபி சார்ங்கதரபாதஸரோஜமீடே ॥ 15

லஸந்மந்தஹாஸம் ச்வஸத்போகிராஜே
சயாநம் தயானந்தபூர்ணாந்தரங்கம் ।
ஸஹஸ்ராரசங்காஸி கௌமோதகீபி:
ஸதா ஸேவிதம் சார்ங்கபாணிம் நமாமி ॥ 16

வியத்ரூபிணம் விச்ருதமேய கீர்த்திம்
விருபாக்ஷவித்யந்தரம் போஜஸூர்யம் ।
வியத்கங்கயா க்ஷாளிதாங்க்ரிம் ப்ரஸந்நம்
ச்ரயே சார்ங்கபாணிம் சிவம் ஸஜ்ஜநாநாம் ॥ 17

நவமணிமயமுத்ரா மண்டிதஸ்வங்குலீகம்
கரகமலமுதாரம் மஸ்தகே மே நிதேஹி ।
தசசதரவிராகா சந்த்ரஸாஹஸ்ர சஞ்சத்
தரவிபுலவிமானாரூட ஹே சார்ங்கதன்வன் ॥ 18

லஸந்நாஸிகா தே ஸுசாம்பேயகோச-
ப்ரபா சாரதாம்போஜபத்ராயதாக்ஷ ।
ப்ருவௌ காமபாணாஸநாஹம் க்ருதிக்நே
வபுஸ்தே ஜகந்மோஹநம் சார்ங்கபாணே ॥ 19

த்வயி ஸதி கருணார்த்ரே சார்ங்கந்வாபிதாநே
கரிவரதஜகத்யாம் காமதேனௌ த்வதந்யம் ।
கிமிதி நரமுவாஸே சோககர்வாபிபூதம்
கலய ஹ்ருதயமேதத் த்வத் பதாம்போஜலக்நம் ॥ 20

கதா சார்ங்கசாபப்ரமுக்தை: ப்ருஷத்கை:-
விதார்யாரிஸங்கான் மதீயான் தயாப்தே ।
ந்ருஸிம்ஹஸ்ய வேஷம் வஹந் தைத்யபுத்ரம்
யதா பாலயஸ்த்வம் ததா பாஹி சார்ங்கின் ॥ 21

தவளநளினதாம்நா சோபமானம் விரிஞ்சி-
ப்ரமுகவிபுதப்ருந்தைர் வர்ணிதாநந்தலீலம் ।
நிகிலநிகமகீதம் நிர்நிமேஷோதிராஜம்
நிரதிசய ஸுகாப்திம் சார்ங்கபாணிம் பஜாம: ॥ 22

நிஜவபுஷி ததான: ஸர்வலோகான் இமாம்ஸ்த்வம்
கிமு ந வஹஸி விஷ்ணோ மாம் த்ருணாத்பல்குபூதம் ।
நநு விதிதமமோகம் நாம தேऽனந்தவிச்வம்-
பர இதி பரணம் மே கிம் தவாதீவ பார: ॥ 23

சந்த்ரமௌலி ஸரோஜவந்திதம் விபுதேச்வரம்
க்ஷீரவாரிதிமத்யமந்திர ஸௌதபாகவிலாஸிநம் ।
போகிராஜசயம் வரம் விமலாசயாவந தீக்ஷிதம்
சார்ங்கபாணிமஹம் பஜே பரதத்வரூபமகாந்தகம் ॥ 24

குண்டலத்வய மண்டிதாம்ஸயுகம் யுகாபசதுர்புஜீ
ப்ரஸ்புரத்தரசக்ரசார்ங்கஸரோஜமம்புஜலோசநம் ।
சாமரைருபவீஜிதம் சபலாயுதப்ரப வாஸஸம்
சார்ங்கிணம் பவஹாரிணம் பணிசாயிநம் ப்ரணமாமி தம் ॥

நகாக்ர காதாபிதளத் கடோர
ஹிரண்ய கர்பாண்டக பித்திஜந்மா ।
கங்காப்ரவாஹ: கில யஸ்ய ஸாக்ஷாத் ।
சிவேந சீர்ஷே வித்ருத: ஸ்மரேதம் ॥ 26

பூமௌ தேவகணா வஸந்தி சதசோ பக்தாவலீ வத்ஸலா
ப்ரஹ்மாத்யா அதிசீக்ரமேவ பலதா: பாதாநதாகண்டலா: ।
ஹித்வா தான் க்ருதபூர்வதேவகதநே நித்ராலஸே நிர்மமே
தேவே சார்ங்கதரே கலிப்ரியஸகே சேத: ஸ்திரம் மேऽத்புதம் ॥

விச்வம்பரே ஜாக்ரதி சக்ரபாணௌ
விஹாய தத்ஸேவனமத்ய மோஹாத் ।
கிந்நம் ஸதா ஸ்வோதரபூரணேऽபி
புமாம்ஸமன்யம் கலு ஹா பஜாம: ॥ 28

சாதக இவ ஜீமூதம்
சகோரபக்ஷீவ சந்த்ரமஸம் ।
காதம்பினீமிவ சிகீ
ஸதைவ சார்ங்கிந் ! ஸ்மராமி தவ ரூபம் ॥ 29

ஜலதிதனயா வாமோத்ஸங்கே சயானமனாமயம்
சமிததனுஜம் சாந்தாகாரம் சரீரப்ருதாம் ப்ரபும் ।
சரணமதுனா யாமி ச்ரேயஸ்கரம் நமதாம் ஸதா
சசி ரவி த்ருசம் ஸ்ரீமச்சார்ங்காயுதம் விபுதேச்வரம் ॥

சதுர்புஜம் சந்தன சர்ச்சிதாங்கம்
சதுர்முகாத்யைரபிவந்த்ய பாதம் ।
சாமீகராத் இந்த்ரதநு: ப்ரியம் தம்
சக்ராயுதம் சார்ங்கதரம் ப்ரபத்யே ॥ 31

ப்ரபுல்லமல்லீ வகுலாம்புஜாத-
சாம்பேய மாலோத்கரசோபி கண்டம் ।
கண்டீரவாஸ்யம் தளிதாரி வர்கம்
ப்ரபும் பஜாமோ ஹ்ருதி சார்ங்கபாணிம் ॥ 32

சரச்சந்த்ரிகாமஞ்ஜுலம் மந்தஹாஸம்
கதா சார்ங்கபாணேர்வயம் லோகயாம: ।
ரமாராதிதம் பாதபங்கேருஹம் தத்
கதா ஸம்ஸ்ப்ருசாமோ முதா மஸ்தகேந ॥ 33

தரித்ராபதம் தாரயாத்யைவ தேவ-
ஸ்வகீயான் ஸதா ரக்ஷ ருக்ஷேச வக்த்ர ।
ஸ்வபூரைர்க்ருஹம் பூரயாத்யாஸ்மதீயம்
ஸ்வதந்த்ரோஸி யத் ரோசதே தத்குருஷ்வ ॥ 34

த்வத்கீர்த்தநம் தவ கதாச்ரவணம் ஜனானாம்
ஸம்ஸாரஹாரி நமதாமபவர்க காரி ।
ப்ரஹ்மாதி வந்த்யபதபங்கஜ திவ்யமூர்த்தே
மாம் பாஹி சார்ங்கதர ஸர்வஸுராதிராஜ ॥ 35

கஸ்துரிகா திலகசோபிமுகேந்துபிம்பம்
ஈஷத்ஸ்மிதாஞ்சிதமமோக க்ருபார்த்ரவீக்ஷம்
த்ரக்ஷ்யே கதா மதுரபாஷி பவித்ரகீர்த்தே-
ஸ்ரீசார்ங்கசாபதர வேதசிர: ஸுவேத்ய ॥ 36

ராகா-சரச்சதராதுல-கர்வபூர-
ஸங்கர்ஷணம் கருணயா கலிதாதிவாஸம் ।
ஸந்தர்சயாஸ்யமதுனா நவ பத்மகாந்தி-
நிக்ஷேபஹாரி மம ஸுந்தரசார்ங்கபாணே ॥ 37

வந்தாமஹே தவபதம் ஸுரப்ருந்தமௌலி-
மாணிக்யதீப்திகலிதம் ஹ்ருதி சார்ங்கபாணே ।

மோஹாந்கார தரணே கருணாம்புராசே-
ஹே ! வாரிஜாக்ஷ ! சசிபிம்ப ! ஸமாஸ்யபிம்ப ! ॥ 38

சம்பு ப்ரஜேச்வர சதக்ரதுபி: ஸதைவ
ஸம்ஸ்தூயமாந க்ருதமந்திர கும்பகோணே ।
ஸர்பேந்த்ர தார்க்ஷ்ய சயநார்க்க கிரீடபாஸா-
திக்காரிதார்க்கசரணம் பவ சார்ங்கபாணே ॥ 39

த்வம் மாதாஸி பிதா த்வமேவ ச
ஸுஹ்ருத் பந்துஸ்த்வதந்யம் ஹரே-
மந்யே நைவ ஸுரம் ஸுரேந்த்ரமபி வா
ப்ரஹ்மாணமீசம் குஹம் ।
வைகுண்ட்டே தவ ஸாந்நிதௌ ஸதிஸ்த்வந்மூர்த்ய-
வேக்ஷா ஸதா
பூயான்மே ந பரம் வ்ருணே வரமஹம்
ச்ரீசார்ங்கபாணிப்ரபோ ॥ 40

குண்டலத்வய மண்டிதாம் ஸயுகம் யுகாப சதுர்புஜீ
ப்ரஸ்புரத்தரசக்ரசார்ங்கிஸரோஜமம்புஜலோசநம் ।
சாமரைருபவீஜிதம் சபலாயுதப்ரபவாஸஸம்
சார்ங்கிணம் பவஹாரிணம் பணிசாயிநம்
ப்ரணமாமி தம் ॥41

நிகமசிரஸா வேத்யம் ஹ்ருத்யம் ஜிதாருணபல்லவம்
ஜநி ம்ருதி ஜரார்திக்நம் நிக்நம் ஸதா ஸ்மரதாம் ஹ்ருதி ।
சரணயுகளம் த்வத்கம் ஸ்வாமிந் ! ப்ரதர்சய ! நஸ்ஸதா-
நிரவதிக்ருபாகூபாரோऽஸி ப்ரபோவர ! சார்ங்கப்ருத் ॥

த்வத்ஸேவா தர்ப்பப்ருதம்-
ப்ரஹ்மேசாதீந் ஸுராநகணயந்தம் ।
அஹமாத்மாநம் விஷ்ணோ-
கதா விலோகே க்ருதார்த்தமிவ சார்ங்கிந் ॥ 43

கமலநயநம் காலோதஞ்சத்ஸிதேதர பங்கஜ-
த்யுதிசரதுமாகாந்தோத்தம்ஸப்ரபாதரளஸ்மிதம் ।
த்ரிஜகதுதரவ்யாப்தம் தேஜோ விரிஞ்சிபவாதிபி:
ஹ்ருதி மம சதா பூயாச்சா ர்ங்கம் தரம் ச ததன்முஷே ॥ 44

ப்ரஸீத மே தயாநிதே ஸமுத்தரார்த்தி வாரிதே:
ப்ரபோ ! பயோதிஜா ஸகே தரித்ரதாம் நிரஸ்ய மே ।
தவைகதேசவிஷ்டிதம் ஜகச்சராசராத்மகம்-
ததேகதேசரூபிணோ ந மே வநம் தவாதிகம் ॥ 45

சாதகும்பலஸதாபரணாட்யாம்-
ச்யாமளாம் ஸுசிராம் அஸமானாம் ।
சார்ங்சாபதரதாவகமூர்த்திம்
சாந்தசித்த இஹ நித்யமுபாஸே ॥ 46

நிர்மலம் நியமிதாஸுரஸங்கம்
நிர்ஜரௌக வர ஸம்மதஹேதும் ।
நந்தகாக்ய கரவாளமுதாரம்
நௌமி சார்ங்கதநுஷோ பயநுத்யை ॥ 47

பர்ஜிதாஸுரகளேபர ப்ருந்தாம்
சார்ங்கிண: கரதலே விலஸந்தீம் ।
காளகாக்னிசயபீஷண காந்திம்
சிந்தயே வரகதாம் ரிபுஹத்யை ॥ 48

நாதமூர்ச்சித ஸரோஜபவாண்டம்
நிர்மலேந்து ஸத்ருசம் ரவிபீமம் ।
காந்திசீக திதிஸம்பவ சைன்யம்
சங்க்கராஜமரிப்ருத் தவ நௌமி ॥ 49

காசிகாநகர தத்பதி க்ருத்யா--
தாஹகாரணமமோகமமேயம் ।
ஸர்வதேவமய ஸர்வசரீரம்-
சக்ரமீச தவ நௌமி கராளம் ॥ 50

ஸர்வதேவாதி தேவேச சார்ங்கபாணே க்ருபாம்புதே ।
ஸ்துதிவ்யாஜாந் மமாகஸ்த்வம் ஸஹஸ்வ
ஸகலம் ப்ரபோ ॥51

ஸ்ரீ:

# சார்ங்கபாணி ஸ்தோத்ரம்*

## (தமிழ் பொழிப்புரை )

1. உலகமனைத்தின் ஸாரமாகத் (உயிர்நாடியாகத்) திகழ்பவரும், உடல் வனப்பால் மற்ற அனைத்தையும் பொருளற்றதாய்ச் செய்பவரும், உலா வரும் தன் உடற்காந்தியாலே உயர்மணிகளையெல்லாம் ஒளியற்ற தாய்ச் செய்பவரும், இரு பக்கமும் படர்ந்த சிறகுகளைக்கொண்ட பக்ஷிராஜனைத் தன் வாகனமாக உடையவரும், சந்திரகாந்த மணிகளால் ஆன வெண்முத்துக் குடையை உடையவரும், மன்மதன், முசுகுந்தன் போன்றோரால் வணங்கப்பட்டவருமான (சார்ங்கபாணிம்) சார்ங்க விற்கையினைத் தொழுகின்றேன்.

2. சார்ங்கபாணி ஸ்வாமியின் திருக்குளம்தான் பொற்றாமரை. அந்த புண்யதீர்த்தமான பொற்றாமரையைப் பார்த்தாலே தூய்மை பிறக்கும். அத்தகைய மகிமை பொருந்திய கும்பகோணத்தில் நித்யவாஸம் புரிவோர் பெருமை பன்மடங்கானது. சார்ங்கபாணியிடம் சஞ்சலமற்ற பக்தியுடையோர் பற்றி கூறவே வேண்டாம். அத்தகைய பக்தியுடையோர் எத்தனை பேர்தான் உலகிலே வசிக்கின்றனர். அதுவும் கூற இயலாததே ஆகும்.

3. அற்ப நெஞ்சாளனே ! நீ உலக வாழ்வில் ஆசைதனை சிறிது சிறிதே அறுத்து, ஒருக்காலும் உறக்கப் பேணாதவரும், தாமரை போன்ற கண்களை யுடையவரும், சரத்கால சந்திரனுக்கொப்ப திருமுகத் தாமரையை உடையவரும் ஆன சார்ங்க வில்லாளனை உனது நெஞ்சத்தில் நினைத்து போற்றுவாயாக.

4. சார்ங்கமுடையவரே ! செல்வத்தின் மீது ஆசைகொண்டும், கொடும்சொல் கூறும் கெட்ட

பிரபுக்களின் முகத்தை ஒருபோதும் பார்க்க மாட்டேன். ஆனால், கருநிற மேகத்திற்கு காலனும், பௌர்ணமி சந்திரன் வெண்டாமரைகளுக்கு எதிர்ப்பிணைகளாய்த் திகழும் திருவடியிணைகளையும் உடைய உமது திருமுக மண்டலத்தை எப்போது காண்பேன்.

5. சார்ங்க விற்கையனே ! போற்றி. ஆனைக்கு அருளியவனே ! போற்றி. திங்கள் திருமுகத்தோனே ! போற்றி. மஞ்சள் பட்டாடை உடுத்தியவரே ! போற்றி. சிங்கமாய் வந்து எதிரியைப் பிளந்தோனே ! போற்றி. சுத்த ஸத்வ குணமுள்ளவனே ! போற்றி. முக்தி அளிப்பவனே ! போற்றி.

6. சார்ங்கபாணியே ! நீலநிற நீருண்ட முகில் போன்ற உமக்கு எமது வணக்கம். பிறரை எதிர்க்கும் வலிமையால் மூவுலகும் அளந்த பெரியோனே ! நீ, எல்லையற்ற துன்பங்களுக்கு இருப்பிடமாய் கரையற்றதுமான வாழ்க்கையெனும் பெருங்கடலுள் அமிழும் என்னை கடக்கச் செய்து காப்பாயாக.

7. சார்ங்க வில் கொண்ட ஹரியை நான் வணங்குகின்றேன். சக்கரமுடைய பரதத்துவத்தை மனத்தால் எண்ணுகின்றேன். கேசியைக் கொன்றவனும், திருமகள் நாயகனும் ஆன உனது நாமத்தை நாவினால் நவின்றேத்துகின்றேன். சார்ங்கபாணியாகிற உன்னை அன்றி மற்றொருவரைச் சிந்தியாது முக்கரணங்களாலும் உனக்கே பணிவிடை செய்கின்றேன்.

8. ஆனை காத்தவனே ! மனிதர்களின் பாபங்களைக் கேட்டுப் பெறுபவனே ! வணங்கியவர்களைக் காப்பவனே ! மலர்மங்கை நாயகனே ! வானமாகிற வைகுண்டத்தில் வசிப்பவனே ! இதயத் தாமரையின் இருள் நீக்கியே ! அசுரர்களுக்கு எமனே ! பிரம்ம தேவாதிகளால் வணங்கப்பட்ட திருவடி இணைகளைக் கொண்ட விஷ்ணுவான ஸ்ரீஹரியே ! சக்ரம், சங்கம், சார்ங்கம் ஆகியவற்றைத் தரித்தவனே ! என்பதாக நாக்கே

சார்ங்கபாணிப் பெருமானைப் போற்றி அச்சம் அகற்றவும் அவரிடத்தில் வேண்டுவாயாக.

9. ஓ ! சார்ங்கபாணிப் பிரபுவே ! உன் அருகிலேயே வசிக்கும் எனக்கு, உனக்குப் பணி செய்ய வாய்ப்பொன்றை நல்குவாயாக. சமரிமான் தோகை, மயிற்தோகை போன்ற பொருட்களால் காற்று வீசும் பணியையாவது எனக்கருள் புரிவாயாக.

10. சந்திரன் ஒளிபோல் வெண்மையான திருமுகம் கொண்டு முறுவல் செய்பவரும், தேன்போல் மொழி பயிற்றுபவரும், தேவர்களைக் காப்பவரும், திங்களையும், தாமரையை மலர்விக்கும் சூரியனையும் இரண்டு கண்களாகப் பெற்றவரும், ச்ரியப்பதியும், ஹரியும், தன்தோள் வலியால் அசுரக் கூட்டத்தை ஒழித்துக் கட்டுபவரும், திருவினை பயக்கும் கும்பகோணத்தில் கோயில் கொண்டருள் பாலிப்பவரும் ஆன சார்ங்கபாணியைத் தொழுகின்றேன்.

11. எப்போதும் ஸஹ களத்திரராய் காட்சி தருபவரும், பறவை ஊர்தி, கருமுகில் மேனி, ஆழி சங்கப் படைக்கலன், தாமரை கண்கள், பௌவநீருடை, கடல் நடுவாசம், சார்ங்கம் எனும் வில் ஆகியவற்றைப் பெறாத அன்ய தேவர்களால் விளைகின்ற பயன்களைக் காட்டிலும் ஸ்ரீசார்ங்கபாணியின் அருளே எனக்கு போதும்.

12. மருத்து, சந்திரன், சூரியன், வானம், அக்னி, ஈசன், ஜலம், பூமி ஆகிய இந்த 8 மூர்த்திகள் மற்றும் எந்த ஒருவருடைய சக்தியின்றி சிறு புல்லும் அசையாதோ அந்த ஒரு நபர் ஆன சார்ங்கபாணியே நம்மால் வணங்கப்பட வேண்டியவர்.

13. கலியின் தோஷத்தை நீக்குபவரும், பாம்பணையில் பள்ளி கொண்டவரும், துக்க தாரித்ர்ய மூர்ச்சைகளை எப்போதும் விலக்குகின்றவரும், கொடியதாகி துர்கதியிலிருந்து மீட்பவரும் ஆன

சார்ங்கபாணியிடத்தில் நம் மனது உதாரமாக அமையட்டும்.

14. புது ஜலங்கொண்ட மேகம் போல் நீல நிறத்தினரும், மன்மத விளையாட்டைப் புரிபவரும், தனிமையில் பார்மகளை அணைத்து ஆனந்தம் காண்பவரும், இனிமையான மொழிதனை குழுவாய் உச்சரிக்கக் கேட்டு மகிழ்ச்சி கொள்பவரும் ஆன முகுந்தனை எப்போதும் மனத்தில் நினைத்து போற்றுகிறேன்.

15. உமையின் கணவரால் உமக்கு வஜ்ரம், அங்குசம் முதலிய படைக்கலன்களையும், பிரம்ம தேவரால் திவ்யாஸ்திரமும் அளிக்கப்பட்டன. தேவ லோக மரங்களின் பற்பல புஷ்பங்களாலும் விளங்கு கின்ற சார்ங்கம் பிடித்தவனின் திருவடித் தாமரைகளை சரணமாகப் பற்றுகின்றேன்.

16. சிறுநகை பூத்து விளங்குபவரும், பாம்பணையில் கண் துயில்பவரும், கருணை, மகிழ்ச்சி ஆகியவற்றை நெஞ்சு நிறையக் கொண்டவரும் ஆயிரம் வலயங்களைக் கொண்ட ஆழியை உடையவரும், சங்கம், கதை ஆகியவற்றால் எப்போதும் பணிவிடை செய்யப்படுபவருமான சார்ங்கபாணியை வணங்கு கிறேன்.

17. ஆகாச உருவாயும், எண்ணிலடங்காப் புகழ்பெற்றவரும், சிவ, பிரம்ம தேவர்களைக்காட்டில் வேறுபட்டவரும், தாமரையை மலர்த்தும் சூரியனும், விண்ணகக் கங்கையால் கழுவிய நிர்மலமான திருவடிகளை உடையவரும், நல்லவர்களுக்கு மங்களத்தை அருள்பவரும் ஆன சார்ங்கபாணியை ஆச்ரயிக்கின்றேன்.

18. ஆயிரம் சூரிய சந்திரர்களின் ஒளியால் மின்னுகின்ற விமானத்தில் விளங்கும் சார்ங்க வில்லாளியே ! கையினில் நன்மணிகளால் தயாரிக்கப் பெற்ற மோதிரங்களை அணிந்து விளங்குபவரான நீவிர் உமது வள்ளன்மை பொருந்திய கைத்தலத்தாமரைகளை என் தலையில் வைத்தருள்வாயாக.

19. செண்பகத்தின் கோசம் போன்று நீண்ட நாசிகளைப் பெற்று விளங்குபவரும், சரத்காலம் போன்று தெளிவாய் பிரகாசிப்பவரும், தாமரை போன்ற நீண்ட கண்களை உடையவரும், தன் புருவக் காந்தியால் மன்மத பாணத்தையே விழுங்குகின்றவரும், உலகமே சொக்கக்கூடிய உடல் வனப்புடைய சார்ங்கபாணியை வணங்குகின்றேன்.

20. இரக்கமும், ஈர நெஞ்சும்கொண்டு வேண்டியவற்றை அளிக்கும் காமதேனுவாய் நீ இருக்கின்றாய். அதை விட்டு இன்னமும் சிலர் துன்பத்தாலும் செருக்காலும் அவதிப்படுகின்றனர். அவர்களை என்னவென்று சொல்வது. அந்நிலை மாறி அவர்களையும் உன் திருவடித் தாமரைகளை வைத்துப் போற்றும் நெஞ்சமாக நீ செய்திடுவாயாக.

21. சார்ங்கபாணியாகிற நீ எங்கள் மேல் எப்போதும் கருணைகொண்டு வில் அம்புகளை விடுத்து விரோதி வர்கங்களை ஒழிப்பாய். ந்ருசிம்ம வேடம் பூண்டு பொன்பெயரோனை எப்படி ஒழித்தாயோ அப்படி நீர் எம்மை காத்தருள்வாயாக.

22. வியப்பான தவத்தால் வெண்மையாய் விளங்கக் கூடிய விரிஞ்சி (பிரம்மதேவர்) முதலானோரால் ஆனந்த லீலை உடையவராய் வருணிக்கப் பட்டவரும், வேதங்களால் ஓதப்படுபவரும்,

உறங்குவான் போல் உயோகத்திலுள்ளவரும், திருப்பாற்கடலில் கண் வளர்ந்தருள்பவருமான சார்ங்கபாணியை வணங்குகிறேன்.

23. ஓ ! விஷ்ணுவே ! அனைத்துலகையும் நீ தன்மேனியில் தரித்துள்ளாய். புல்லிற்கும் கீழான என்னை ஏன் இன்னமும் தரியாதுள்ளாய். விச்வத்தையே தரிப்பதால் விச்வம்பரனான உனக்கு என்னை தரிப்பது ஒரு பாரமாக அமைகின்றதா ? ஆச்சர்யம் ! ஆச்சர்யம் !

24. அறிஞர்களாலும், சந்திரமௌலீச்வரராலும் வணங்கப்பட்ட பாத கமலத்தை உடையவரும், பாற்கடல் நடுவே மாளிகையின் மத்தியில் கோயில் கொண்டருள்பவரும், பாம்பணையில் கண் துயில்பவரும், நல்லோரைக்காக்கும் தீக்ஷைகொண்ட உத்தமரும், பரதத்வஸ்வரூபியும், பாபங்களுக்கு எமனானவரும் ஆன சார்ங்கபாணியை நான் வணங்குகிறேன்.

25. குண்டலங்களின் இணையில் விளங்கும் காதிணைகளைப் பெற்றவரும், தோள் நான்கினைப் பெற்று விளங்குபவரும், சக்ரம், சார்ங்கம், தாமரை ஆகியவற்றோடு தாமரையைக் கண்களாகப்பெற்றுத் திகழ்பவரும், சாமரங்களால் வீசப்படுபவரும், நல்லாடை உடுத்தி மிளிர்பவரும், பாம்பணையில் கண் துயில்பவரும், உலக வாழ்வை ஒழிப்பவரும் ஆன சார்ங்கபாணியை வணங்குகிறேன்.

26. எம்பெருமான் திரிவிக்கிரமனாக அவதாரம் எடுத்து விண்ணுற நீண்டளந்தான். அப்போது அவனுடைய கால் நகம் குத்தி பிரம்மாண்டம் பொத்தலாகிப்போனது. அதிலிருந்து தோன்றினாள் கங்கை. (நாற்றிசையிலும் பெருகி வெவ்வேறு பெயர் கொண்டிலங்கினாலும்அளகநந்தையாகப் பாரதத்தில் பாய்வது குறிப்பிடத்தக்கது) சதுப்புயன் தாளில் பெருகிய அந்த கங்கா பிரவாஹத்தை சாக்ஷாத்

சிவபெருமான் தலையில் தாங்கினார் என்பதனை நினைக்க வேண்டும்.

27. பக்தர்களுக்கு கன்றினைப் போல் கருணை காட்ட பூமியிலே தேவகணங்கள் நூற்றுக்கணக்கில் வசிக்கின்றனர். பிரம்மாதி தேவர்களும் விரைவில் பயன் தருவராய் உள்ளனர். இந்திரன் முதலானோர் அடிதொழுதாரை அரவணைத்துக் காக்கின்றனர். அவர்கள் அத்தகைய தொழில்களையெல்லாம் விட்டு தேவர்களுக்குள் முன்னர் நடந்த போரினால் சோம்பலிலும், உறக்கத்திலும் மூழ்கியுள்ளனர். ஆதலால் கலிதோஷம் போக்க வல்லவரும், தோழரும் ஆன சார்ங்கதாரியினிடத்தில் அற்புதமான என் நெஞ்சு நிலை கொள்வதாகுக.

28. உலகினைத் தரித்து விழிப்போடு காக்கும் சக்ரபாணியிடத்தில் இன்றைக்கு என் மனம் பற்றவில்லை. அவ்வாறு உன்னைவிட்டு அடுத்தவரை அண்டுவது என்பது இன்றைக்கு எங்களுக்கு ஏற்பட்ட மோஹத்தினாலே தான். "விழிக்கும் கண்ணிலேன் நிங்கண் மற்றெல்லால் வேறொருவரோடு என் மனம் பற்றாது" என்ற ஆழ்வார்களின் அருள்வாக்குப்படி (நாலாயிரதிவ்ய பிரபந்தம்-முதலாயிரம்-பெரியாழ்வாய் திருமொழி-5-1-2) வயிற்றை நிரப்ப இயலாத(அ) உணவே கிட்டாத துன்பம் நேரிடினும் எப்போதும் உன்னையன்றி வேறொரு புருடரை ஒருக்காலும் வணங்கமாட்டோம்.

29. சாதகப் புள்ளானது நீருண்ட மேகத்தை விரும்புவது போல, திங்களின் காந்தியை சகோரப் பறவை வேண்டுவது போல, மயில் நடம்புரிய மேகக் கூட்டத்தை எண்ணி காத்துக் கிடக்குமாப்போலே சார்ங்கபாணியே ! எப்போதும் உனது உருவத்தை நினைத்துக்கொண்டே இருக்கின்றேன்.

30. பாம்பணையில் பள்ளிகொண்ட பரமனும், அவரது இடது புறம் பணிவிடை செய்யும் இலட்சுமி தேவியை உடையவரும், அரக்கர்களை அழித்தவரும், சாந்தஸ்வரூபியும், உடலம் எடுத்தவற்றிற்கெல்லாம் உள்ளுயிராகிய தலைவரும், சந்திர சூர்யர்களைக் கண்களாகப் பெற்றவரும், செல்வந்தரும், சார்ங்கத்தைப் படைக்கலனாக உடையவரும், அறிஞர்களின் தலைவரும் ஆனவரை நான் இப்போது சரணடைகின்றேன். எப்போதும் வணங்குகின்றவர் களுக்கும் அவர் நலத்தை அருள்வார்.

31. நாற்றோளனும், சந்தனம் பூசிய நறுமண மேனியனும், நான்முகாதியரால் வணங்கப்பெற்ற திருவடிகளையுடையவனும், பொன் போல் மிளிரும் இந்திர வில்லில் ஆசையுடையவரும், சக்கரத்தைப் படைகலனாக உடையவரும் ஆன சார்ங்கதாரியைச் சரணடைகின்றேன்.

32. எம்பெருமானுடைய கழுத்து,கை ஆகிய அங்கங்களில் மலர்ந்த மல்லிகை, மகிழ், தாமரை, செண்பகம் ஆகிய மலர்களால் தொகுக்கப்பெற்ற மாலை அணிவிக்கப்பட்டுள்ளது. அலங்காரப் பிரியரும், சிங்கமுகம் கொண்டு எதிரிகளின் கூட்டத்தைப் பிளந்தவரும் ஆன சார்ங்கபாணிப் பிரபுவை நெஞ்சினில் நினைத்துப் போற்றுவோம்.

33. சார்ங்கபாணி சரத்கால சந்திரன் போன்று அழகானவர். சிறுநகைப் பூத்துத் திகழ்பவர்.அவரை நாம் எப்போது காண்போம். அதோடல்ல; அந்த சார்ங்கபாணித் தெய்வம் திருமகளால் பூசனை செய்யப்பட்ட திருவடித் தாமரைகளை உடையவர். மகிழ்ச்சியுடன் அவரை எப்போது நாம் தலையில் வணங்கி மகிழ்வோம்.

34. ஸ்வாமி ! வறுமையை இன்றே வெட்டிக் களைவாயாக. தன்னைச் சேர்ந்தோரை அல்லது அண்டியவர்களை கோரமாகிற யமப்பிடியிலிருந்து காத்திடு. தன்னூர் தன் க்ருஹத்தில் தன்னைச் சார்ந்தோரை நிரப்பிடுக. இக்கட்டளைகளை ஏற்று ஸர்வ தந்திர ஸ்வாதந்த்ரனான நீ உன் மனதிற்கு எது பிடிக்குமோ அதைச் செய்தருள்வாயாக.

35. பிரம்மாதி தேவர்களால் வணங்கப்பெற்ற திவ்ய மூர்த்தியே ! உன் தோத்திரமும், உன் கதாசிரவணமும் மனிதர்களுக்கு உலக வாழ்க்கையை ஒழிக்கவல்லது. வணங்கியவர்களுக்கு வீடுபேறும் நல்க வல்லது. அனைத்து தேவர்களுக்கு அதிபதியே ! சார்ங்கபாணித் தெய்வமே என்னைக் காப்பாயாக.

36. வேதோபநிஷத்துக்களால் நன்கறியப்படுபவரே ! இனியமொழி பயிற்றுபவரே ! களங்கமற்ற புகழை உடையவரே ! கஸ்தூரித் திலகமணிந்தவரே சந்திர பிம்பம் போல் பிரகாசிப்பவரே ! சிறு நகை பூத்துத் திகழ்பவரே ! குளிர்ந்த பார்வையால் அருள்புரிபவரே ! இத்தனை பெருமைகொண்ட சார்ங்கவில் கையனே ! எப்போது என்னைப் பார்த்தருள்வாய்.

37. பௌர்ணமீ நிலவொளி சரத் காலத் தெளிவு, முயல் தரிப்பு ஆகியவற்றால் கர்வமுற்று ஸங்கர்ஷணன் (சந்திரன்) போன்றவரும், கருணையே வடிவானவரும், புதிதாய் அலர்ந்த தாமரையினை விஞ்சும் அழகரும் ஆன என்னுடைய சார்ங்கபாணியே ! இப்போது உன் முக தர்சனத்தை எனக்கு அளிப்பாயாக.

38. நல்ல அழகியதான திருமுக மண்டலத்தை உடையவரே ! சந்திரபிம்பமே ! தாமரைக் கண்ணே! மோகக் கடலில் மூழ்கித் தத்தளிப்போரை கரையேற்ற

வல்ல கருணைக் கடலே ! இதயத்தில் மாணிக்கம் போல் ஒளிர்பவரே ! தேவர் குழாம் தலையால் வணங்கிப் போற்றிய திருவடிகளைப் பெற்ற சார்ங்கபாணியே ! உனது பதகமலங்களை வணங்குகிறோம்.

*39.* சிவன், பிரம்மா, சுரோத்தியர் போன்றவர்களால் எப்போதும் தொழுதேத்தா நின்றுள்ள கும்பகோணத்தில் கோயில் கொண்டோனே ! ஆதிசேஷன் மீது கண்ணுறக்கம் பேணுபவனே ! கருடாதிகளால் பணிவிடை செய்யப் பெறுபவனே! தனது கிரீடத்தின் ஒளியால் சூரிய கிரணத்தை திக்காரம் புரியும் சார்ங்கபாணியே ! நானுன்னை வணங்குகின்றேன்.

*40.* தாயும் நீயே ! தந்தையும் நீயே ! உற்ற உறவினனும் நீயே ! உன்னையன்றி தேவர்தம் தலைவனான வேறு யாரையும் நான் நினைக் கின்றிலேன். ஸ்ரீவைகுண்டத்தில் உன் சந்நிதானத்தில் நித்ய வாஸங்கொண்டு உன்னை எப்போதும் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும். இதைக் காட்டிலும் மேலான வரத்தினை உன்னிடம் ஒருபோதும் நான் வேண்டமாட்டேன்.

*41.* இச்சுலோகத்தின் பொருள் 25 ஆம் சுலோகத்தைப் போன்றதே ஆகும்.

*42.* வேதங்களால் அறியப்படுபவரும், மனத்திற்கு இனிமையானவரும், சிவப்பான இளந்தளிரை வென்றவரும், பிறப்பு, இறப்பு, மூப்பாகிற பிணிகளை ஒழிப்பவரும், உனக்குப் பணி செய்து உன்னையே நினைத்திருப்போரின் நெஞ்சில் எப்போதும் எழுந்தருளியிருப்பவரும் ஆகிய நீவிர் எல்லையற்ற கருணைக் கடலாகின்றாய். அத்தகைய பெருமை வாய்ந்த சார்ங்கபாணி பிரபுவே ! உமது திருவடியிணைகளை எனக்கெப்போதும் காண்பித்தருள்வாயாக.

43. உன்னுடைய சேவையால் செருக்குற்ற பிரம்மதேவாதிகளையெல்லாம் ஒருபோதும் நான் எண்ணுவதில்லை. என் ஆத்மாவை விஷ்ணுவிற்காகவே நான் அர்ப்பணித்து வாழ்கின்றேன். ஆதலால் நான் கிருதார்த்தமடைய சார்ங்கபாணியே ! எனக்கெப்போது வைகுண்டத்தை அளித்தருள்வாய்.

44. தாமரைக் கண்கள், விஷம் போன்ற வளர் கருமேனி, தாமரை போன்ற பிரகாசம், சரத்காலம் போன்ற தெளிவு, உமையின் மணாளர் தரிக்கும் திருநீற்றுக்கு ஒப்பான வெண்மை, வெண்ணகை, மூவுலகையும் தன் வயிற்றில் கொண்ட பெற்றிமை, பிரம்ம தேவாதிகளையும் வயிற்றிலிருந்தே தோற்றுவிக்கை, ஆகியவற்றுடன் சங்கம், சார்ங்கம் முதலான படைகலன்களையும் உடைய தாங்கள் எப்போதும் என் நெஞ்சத்தில் குடிகொண்டருள வேண்டும்.

45. இந்த உலகத்தில் உள்ள இயங்குவன, இயங்காதன போன்ற அனைத்தும் உங்களது பார்வையில் ஏகதேசம் தான் (நாலில் ஒரு பங்கு (அ) லவலேசம் அளவே). உன்னாலேயே தோன்றிய என் போன்ற உயிரினங்களைக் காப்பது உமக்கு ஒன்றும் மிகையான செயலுமல்ல. ஆதலால் கருணைக் கடல் ஆகிய நீ எனது வறுமை போக்கி உலக வாழ்க்கை எனும் கடலிலிருந்து மேலெடுத்துக் காப்பீராக.

46. பொற்கும்பம் போல் திகழும் மேனியில் விலை மதிப்பற்ற அணிகலன்களை அணிந்து விளங்குபவரும், சியாமளையை விஞ்சி நிற்கும் சாமமாமேனியனும், சார்ங்க வில்லைத் தரித்துள்ள உமது வடிவத்தை சாந்தசித்தமான இந்த இதயத்தில் தினமும் உபாசிக்கிறேன்.

47. அசுரக் கூட்டத்தை அடக்கி தன் கட்டுக்குள் வைத்து நிம்மலமாகப் பிரகாசிப்பவரும், பெருக்கெடுத்த ஓடை போல் வரமருளும் காரணத்தால் நல் கர்வமுடையவரும், நந்தகம் எனும் கத்தியை அணிகலனாகப் பெற்றவரும், பரந்த உள்ளமுடையவருமான சார்ங்கபாணியை அச்சமகல வேண்டி வணங்குகின்றேன்.

48. அசுரர் குழாத்தை நடுங்கச் செய்வதும், சார்ங்கபாணியின் கைத்தலத்தில் விளங்குகின்றதும், தீப்பிழம்பாய்த் திகழும் காளியைப் போல் பயங்கரமானதும் ஆன உம்முடைய உயர்ந்த கதையை எதிரிகள் ஒழிய வேண்டி நெஞ்சால் நினைக்கின்றேன்.

49. நாபீகமல சரோஜத்தின் வழி தோன்றிய தனது நாதத்தாலே அண்ட சராசரங்களை மூர்ச்சிக்கச் செய்வதும், தூய்மையான சந்திரனைப் போன்றதும், கதிரவன் ஒளி போல் பயங்கரமானதும், கருணை வடிவும், அரக்கர் குலத்தைத் தண்டிக்க உதவும் முழக்கத்தைப் பெற்றதும், விரோதிகளிடத்திலும் விளங்குமதான உம்முடைய சங்கராஜத்தை வணங்குகின்றேன்.

50. காசி நகர நாயகனின் செயலால் தகிப்பிற்குக் காரணமானதும், அமோகமும், அமேயமும், ஸர்வதேவ மயமும் ஸர்வ சரீரமுமான சக்கரத்தண்ணலே அச்சம் சரும் உமது திருமுக மண்டலத்தை வணங்குகின்றேன்.

51. தேவர்களனைவருக்கும் தேவனாய் விளங்குபவரே ! சார்ங்கபாணித் தெய்வமே ! கருணைக் கடலே ! ஸ்வாமி ! தோத்திரம் என்ற வழியாலே நான் பலவாறாய்த் தங்களைப் பேசியிருப்பேன். அவற்றை எல்லாம் தாங்கள் பொறுத்தவராய் எனது பாபங்களைப் போக்கி அருள்புரிவீராக.

சுபம்

சரசுவதி மகால் நூலக அச்சகம்